பக்கங்கள்: ஆறு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

மங்கையரின் அங்கமெல்லாம் தங்க நகைகளால் மின்னிப் பேசிட இன்றேவிரையுங்கள்!
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி, 176/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(கி/1768)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 03 திங்கட்கிழமை 16-04-2001 தொலைபேசி: 3378 ஒலி: 117

## ★ ஜனாதிபதியின் செய்தியுடன் நோர்வேத் தூதுவர் வன்னி செல்கிறார்

### யுத்தநிறுத்தத்தை நீடிக்க முயற்சி

(நமது நிருபர்)

**இலங்கைக்கான நோர்வேயின் தூதுவர் ஜோன்வெஸ்பேர்க் விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களுடன் பேசுவதற்காக இன்று மீண்டும் புலிகளின் பிரதேசமான வன்னிக்குச் செல்லவுள்ளார்.**

**தூதுவர் வெஸ்பேர்க் ஜனாதிபதி சந்திரிகாவினது செய்தி ஒன்றையும் எடுத்துச்சென்று புலிகளின் உயர் மட்டத்தலைவர்களுக்கு விளக்கிக் கூறவுள்ளார்.**

அரசு-புலிகள்சமாதானபேச்சு வார்த்தைக்கு முன்னோடியாக நோர்வே அரசினால் புரிந்துணர்வு ஒப்பந்தம்தொடர்பாகக் கடந்த6ம்திகதி புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ் செல்வனை நோர்வே தூதுவர் ஜோன்வெஸ்பேர்க்வன்னியில் சந்தித்துப் பேசியிருந்தார்.

இப் பேச்சுவார்த்தையின் போது யுத்தநிறுத்தம் மற்றும் புலிகள் மீதானதடைநீக்கம் ஆகியவற்றை அரசுமேற்கொள்ள வேண்டுமென புலிகளினால் முன்வைக்கப்பட்டது:

இதைத் தொடர்ந்து இலங்கை அரசினால் தமிழ்-சிங்கள புதுவருடத்தையொட்டிஐந்து நாள் தாக்குதல் தவிர்ப்புபிர

→ 6ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு - கிளிநொச்சி லொறிச்செலவு ரூ. 78,000

(கொழும்பு)

கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்கும் பொருட்களை ஏற்றிச்செல்ல லொறி ஒன்றுக்கு ரூபா 78 ஆயிரம், முல்லைத்தீவுக்குச் செல்ல ரூபா 82 ஆயிரமும் செலவு ஏற்படுகிறதாம்.

கொழும்பிலிருந்து வவுனியாவரை ரூபா 5 ஆயிரமும், வவுனியாவிலிருந்து பிரமணாளங்குளம் வரை ரூபா 25 ஆயிரம், பிரமணாளங்குளம் - கிளிநொச்சிக்கு ரூபா 31 ஆயிரம், பிரமணாளங்குளம் முல்லைத்தீவு ரூபா 33 ஆயிரம்.

இதனைவிட வவுனியாவில் ஒரு லொறிக்கு ரூபா 8 ஆயிரம் கட்சிகளுக்கு செலுத்த வேண்டியுள்ளதாம் ஏற்றி இறக்கும் செலவு (தடை முகாம் உட்பட) ரூபா 4 ஆயிரமும், ஆங்காங்கே அன்பளிப்புக்கள் ரூபா ஐயாயிரமுமாக மேற்குறிப்பிட்ட தொகை செலவு ஏற்படுகிறதாம்.

## இத்தாலிக்குசெல்லமுனைந்த 123இளைஞர்கள் விவகாரம்

### பாதாள உலக குழ்பலுடன் தொடர்பு

(கொழும்பு)

மீன்பிடிக்கப்பல் ஒன்றில் சட்டவிரோதமான முறையில் இத்தாலிக்கு ஏற்றிச்சென்ற 123இளைஞர்களின் விவகாரத்தின் பின்னணியில்பாதாள உலகக்கும்பலின் தொடர்புகள் இருப்பதாக நீர்கொழும்பு பொலிசார் தெரிவித்துள்ளனர்,

123இளைஞர்கள் சட்டவிரோதமாக இத்தாலிக்கு அழைத்துசென்ற கப்பலின் உரிமையாளர் சிலமுக்கிய அம்சங்களை பொலிசாருக்கு தெரிவித்துள்ளார்

இதன்அடிப்படையில் நீர்கொழும்பு பொலிசார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## ம. எண்ணெய்; டீசல் விலை ஏற்றம்

[கொழும்பு]

எரி பொருட்களின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப் பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப் பின்பிரகாரம் டீசல் லீற்றர் 3ரூபாவாலும் மண்ணெண்ணை லீற்றர் ஒரு ரூபாவாலும் என்ஜின்ஒயில் லீற்றர் 1 ரூபா90 சதத்தாலும் அதிகரிக்கப் பட்டுள்ளது இதில்பெற்றோல் விலை அதிகரிக்கப்படவில்லை.

சர்வதேச நாணயநிதியத்தின் அறிவுறுத்தலின் பிரகாரமே எரிபொருளின் விலை அதிகரிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது; (வ)

## ஈழத்தமிழர்கள் அமைதியாக வாழ தனித்தமிழீழமே ஒரே தீர்வாகும்


### தேர்தல் அறிக்கையில் வை கோ.

(சென்னை)

இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் அமைதியுடனும், மானத்துடனும் உரிமையுடனும் வாழ்வதற்கு தமிழ் ஈழமே ஒரே தீர்வாகும். இவ் இலட்சியத்தில்புலிகள்வெல்ல மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம்எப்பொழுதும் துணைநிற்கும்.

இவ்வாறு புதுவருட தினத்தன்று கோவையில் இடம் பெற்ற புதுவருட சிறப்பு மாநாட்டில் ம.தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

32 பக்கங்களைக்கொண்ட ம.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது ஈழத் தமிழர்கள் அமைதியுடனும் உரிமை பெற்றும் வழுவதற்கு தனித தமிழ் ஈழம் அவசியமென்றும் விடுதலைப் புலிகள் போராடி அதனைப் பெற்றுக் கொள்ள அவ் அமைப்புக்கு ம.தி.மு.க. தொடர்ந்தும் ஆதரவு வழங்கு மென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.



பல்லாயிரக் கணக்கான கட்

→ 6ஆம் பக்கம் பார்க்க

## மீளக் குடியமர உதவுக இடம் பெயர்ந்த முஸ்லீம்கள் புலிகளிடம் கோருவர்!

(கொழும்பு)

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வடபகுதியில் இருந்து இடம் பெயர்ந்து முஸ்லீம் மக்கள் தங்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமர்வது தொடர்பாகவும்,ஏனைய, பிரச்சினைகள் தொடர்பாகவும் விடுதலைப் புலிகளுக்குத் தெரிவிக்க நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

இந்த நடவடிக்கைகளின் முதல் கட்டமாக அண்மையில் வன்னிக்குச் சென்று திரும்பிய சர்வமதக் குழுவில் இடம்பெற்றிருந்த முஸ்லீம்

→ 6ஆம் பக்கம் பார்க்க

## இளைஞனை காணவில்லை

(மந்திகை)

புதுவருடப்பிறப்பன்று காலையில் வீட்டிலிருந்து புறப்பட்டுச்சென்றஇளைஞன்

→ 6ஆம் பக்கம் பார்க்க

## ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் மத்தியகுழுக் கூட்டம்19இல்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியகுழுக்கூட்டம் 19ம்திகதி வியாழக்கிழமை நடை பெறவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாதலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாகவும்,நாட்டின் இன்றைய பிரச்சினை தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது லண்டனில் தங்கியுள்ள ஜனாதிபதி சந்திரிகா 19ம்திகதி நாடுதிரும்பியதும் இக்கூட்டம் நடைபெறவுள்ளது. (வ)

## சமாதானத்திற்கான ஒளிக்கீற்றுகள் நாட்டில் தற்போது தென்படுகின்றன

### யாழ். மறை மாவட்ட ஆயர் தெரிவிப்பு

[கொழும்பு]

சமாதானத்திற்கான ஒளிக்கீற்றுகளாக நாட்டில் தற்பொழுது நிகழ்ந்து வரும் சம்பவங்கள் விளங்குகின்றன.

இவ்வாறு யாழ். மறை மாவட்ட பேராயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை வெளியிட்டுள்ள புத்துயிர்ப்பு விழா நற்செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தொடர்கையில்; சமாதானத்திற்கான ஒளிக்கீற்றுகள் தென்படும்தற்போதைய சந்தர்ப்பங்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கும் படியும் மக்களை கேட்டுள்ளார்.

மேலும் தற்போதைய காலகட்டத்தில் இந்த வருடம் என்றுமில்லாதவாறு சமாதானமுயற்சிகள் முன்னெடுக்கப்படுவது வரவேற்கத்தக்கதாகும்.

சமாதானத்தை ஏற்படுத்த இனியும் காலங்கடத்தாது அனைவரும் திடசங்கற்பம் பூண வேண்டும் எனவும் கேட்டுள்ளார். [க-2]

## தமிழில் உரையாற்றிய இராணுவ அதிகாரி

[யாழ்ப்பாணம்]

சித்திரைப் புத்தாண்டினை முன்னிட்டுயாழ்ப்பாணத்தில் நேற்று நடத்தப்பட்ட மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்கு பற்றிசிறப்பித்த யாழ்.மாவட்ட கட்டளைத்துறை அதிகாரி மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தர தமிழில் சிறப்புரையாற்றினார்.

இவ் சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்கு பற்றிய வீரர்களுக்கு பரிசு வழங்கும் வைபவம் ஆரியகுளப் பகுதியில் அமைந்த விசேட மேடையில் நடத்தப்பட்டது.

இதில் கலந்து கொண்ட தளபதி காமினி ஜெயசுந்தர

→ 6ஆம் பக்கம் பார்க்க

# யாழ்.மாவட்டத்தில் நியமனம் பெறும் பதினேழு ஆங்கில ஆசிரியர்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புமுகமாக 17 ஆங்கில ஆசிரியர்கள் யாழ் மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி ஆசிரியர்களுக்குரிய நியமனக் கடிதங்கள் யாவும் அவ்வவ் வலயப் பணிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இவர்களது நியமனம் இம் மாதம்25ம் திகதிமுதல்செல்லுபடியாகுமென கல்வி அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வலய ரீதியாக இணைக்கப்பட்ட ஆசிரியர்கள் விபரம் வருமாறு, தர்மலிங்கம் பரஞ்சோதி-தீவகம், லதா சடாட்சரம்-வடமராட்சி, யோன் பிள்ளை ஏசுசிந்திரன் அருள்ராஜ்-தென்மராட்சி, துஷிதா தர்மலிங்கம் - தென்மராட்சி, தர்சினி நாகராஜா - யாழ்ப்பாணம், ராதிகா கனகரட்ணம் - யாழ்ப்பாணம், ஜேரின் மோகன இராசசிங்கம்- யாழ்ப்பாணம், ஜோசப் பிரதீபா, காயத்திரி - யாழ்ப்பாணம்.

வலிகாம வலயத்திற்கு இணைக்கப்பட்டோர் விபரம் வருமாறு,

நல்லையா கரிகரன், தர்மசேகரம் விபுஷானந்தி, இராசசிங்கம் சர்மினி, வைத்திலிங்கம் உமாசுதன், ஜெயந்தி வைத்திலிங்கம், சிவயோகம் சசினி, கதிர்காமராஜா திருக்குமரன், சிதம்பரநாதன் சிவதரன்.

மேற்படி ஆசிரியர்கள் தமது வலய பணிப்பாளர்களுடன் தொடர்புகொண்டு நியமனக் கடிதங்களை பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது; (உ-15)


## சிறு விளம்பரம்

### புதிய புத்தகங்கள்

அம்பிகை பாகனின் ஆண்டு 5 புலமைப் பரிசில் 2001-2002 இற்கான முற்றிலும் புதிய பதிப்பு, ரமணனின் கம்பியூட்டர் நூல்கள், கேசவனின் அளவையியல், மெய்யியல் புத்தகங்கள், வண்ண மிகு வாழ்த்து மடல்கள் விற்பனையாகின்றன. பரணன் கொம்யூனிகேசன்ஸ் 138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி. 2365. (கி/1787)


## வீழ்ந்து காயம்

[யாழ்ப்பாணம்]

சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்குகொண்டவர், இன்னொரு சைக்கிளுடன் மோதுண்டதால் வீழ்ந்துகாயமடைந்த நிலையில் யா/போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நிலாவரைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் புத்தூர் கிழக்கைச் சேர்ந்த அமுதலிங்கம் [வயது 41] என்பவரே காயமடைந்தவராவார். [உ-10]

## துர்நாற்றம் வீசும் காவலூர் மீன் சந்தை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை நகரப்பகுதியில் அமைந்துள்ள மீன் சந்தையில் துர்நாற்றம் வீசுவதால் அங்கு செல்லும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

மீன் சந்தைக் கழிவுகள் ஒழுங்காக ஓரிடத்தில்போடப்படாது ஆங்காங்கே வீசப்படுவதனாலும், அவற்றை அகற்றுவதில் அசிரத்தைப் போக்கினைக் கடைப்பிடிப்பதுமே இந்நிலைக்குக் காரணம் என அங்கு செல்வோர் தெரிவிக்கின்றனர். (உ-75)

## இடிதாக்கியதில் ரீ. வி. அன்ரனா சேதம்

(ஏழாலை)

மல்லாகம் நீதிமன்றவீதியில் உள்ள வீட்டின் மீது இடிதாக்கியதில் ரீ.வி. அன்ரனாவும், மின் இணைப்பும் பலத்த சேதமடைந்துள்ளன.

சிலதினங்களுக்கு முன் இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது அவ்வீட்டில் இருந்தவர்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (க-12)

## மனைவிக்காக உயிர் துறந்த பாசமுள்ள கணவன்

(யாழ்ப்பாணம்)

மனைவி அலரி விதையை உட்கொண்டதை அறிந்த பாசக் கணவன் தூக்கிட்டு தனது உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் கோண்டாவில் பகுதியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான கறுப்பையா மகேசகுமார் (வயது 35) என்பவரே மரணமானவராவார்.

அலரிவிதை உட்கொண்ட மனைவி தெய்வாதீனமாக உயிர் தப்பிவிட்டதாக மேலும் அறியப் படுகிறது. [க-104]

## புத்தாண்டை ஒட்டி வைத்திய சாலையிலிருந்த நோயாளர் வெளியேற்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ் போதனா வைத்திய சாலையில் தங்கிச் சிகிச்சை பெற்று வந்த நோயாளர்கள் பலர் அவசர அவசரமாக வெளியேறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

புத்தாண்டை முன்னிட்டே இவர்கள் இம்முயற்சியில் ஈடுபடுவதாகவும் நோய்முற்றாக குணமடையாத நிலையில் இவர்கள் இவ்வாறு செல்வது குறித்து வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை வெளியிட்டுள்ளன. [க-104]

## சேமிப்புச் சான்றிதழ்

[யாழ்ப்பாணம்]

இலங்கைவங்கி ஆஸ்பத்திரிவீதி மேற்தர கிளையில் வருடப்பிறப்பு அன்று பணவைப்பு செய்தவர்கள் அனைவரது பெயர்களும் குலுக்கல் மூலம் அதிஷ்டம்பார்க்கப்பட்டு முதல் 35 பேருக்கு இருநூறு ரூபா பெறுமதியான சேமிப்புச் சான்றிதழ் வழங்கப்படும் என பிரதான முகாமையாளர் தெரிவித்தார் (உ)


யாழ் நகரில் கைக் கடிகாரங்களின் சங்கமம்

ஞானம் அழகு மாடம்

87, கஸ்தூரியார் வீதி,

அழகு சாதனங்கள் அன்பளிப்புப்பொருட்கள் பாக் வகைகள் தையல் சாதனங்கள் கொலோன் வகைகள் என்பவற்றையும் தரமாக நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

(கி/1793)



தரம் 5, O/L, A/L உட்பட அனைத்து வகுப்புக்களும்

1/4 நூற்றாண்டைக் கடந்த இணையற்ற சேவையில் நடைபெறுகின்றன.

(கி-1794)


## கிளைக்குழுத் தேர்தல்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கப் பொதுக் கூட்டம் மே மாதம் இடம் பெறவுள்ளது.

ஊர்காவற்றுறைப் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தின் கிளைக் குழுத் தேர்தல்கள் நடந்து முடிவடைந்துள்ளதை அடுத்து பொதுக்கூட்டம் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள்செய்யப்பட்டுவருகின்றன.

ஊர்காவற்றுறைப் பகுதியில் எழுவைதீவு நாரந்தனைப் பகுதிகளில் கிளைக் குழுத் தேர்தல் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-75]

## ஆரம்பகல்வி செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிக் கல்விவலயப் பாடசாலைகளில் 5ம் தரம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மீள் பயிற்சி 17ம் திகதி செவ்வாய்க்கிழமை யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் 18 ஆம் திகதி புதன்கிழமை யா/இணுவில் மத்திய கல்லூரியின் ஆரம்பப் பாடசாலையிலும் நடைபெறும்.

19 ஆம் திகதி வியாழக் கிழமையும் 20 ஆம் திகதி வெள்ளிக் கிழமையும் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் தெரிவு செய்யப்பட்ட இருபது ஆசிரியர்களுக்கான களிமண் கடதாசிக் கூழ் ஆக்க வேலைக்கான செயலமர்வு நடைபெறும்.

மேற்படி பொருத்தமான ஆசிரியர்களை செயலமர்வுகளில் பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா அறிவித்துள்ளார்.

இதேவேளையில் மே மாதம் 12 ஆம், 13 ஆம், திகதிகளில் நடைபெறவுள்ள தரம் 1,2,3 ஆசிரியர்களுக்கான நாடக களப்பயிசிக்கும் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள தரம் 4,5 நாடகக் களப் பயிற்சிக்கும் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கடதாசி மடிப்புக் கலையாக்கச் செயலமர்வுக்கும் பொருத்தமான ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## முன்நிபந்தனைகள் சமாதானமுயற்சிகளுக்கு தடையாய் அமையும்

### தே.ச.பேரவை எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் இனப் பிரச்சினைக்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முன் நிபந்தனையை விதித்து சமாதான முயற்சிகளுக்குத் தடை செய்யக்கூடாது.

இவ்வாறு தேசிய சமாதானப் பேரவை அரசிடமும் விடுதலைப் புலிகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

முன்நிபந்தனைகளை விதிப்பது பேச்சுவார்த்தைகளை மேலும் தாமதப்படுத்தும்.

புதுவருடத்தை முன்னிட்டு அரசவிடுத்திருக்கும் மோதல் தவிர்ப்பை மேலும் நீடிக்க வேண்டும்.

அத்துடன் பேச்சுவார்த்தை நடைபெறும் வரை விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும், அல்லது இடைநிறுத்தி வைக்கவேண்டும்.

அரசு, பேச்சுவார்த்தைக்கான தினத்தை விரைவில் அறிவிக்குமாறு விடுதலைப் புலிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளதற்கு புலிகள் இணங்க வேண்டும்.

இவ்வாறு தேசியசமாதானப் பேரவை மேலும் தெரிவித்துள்ளது. [செ]


## வாழ்த்துகிறோம்

(எம் மக்களின் சேவைகளுக்காக)



### திரு, சு. மணிவாசகன்

(சமாதான நீதவான்)

(முன்னைனாள் செயலாற்று முகாமையாளர் வ. பி. போ. ச.)

11-3-1965ம் ஆண்டு இலங்கை மத்திய போக்குவரத்து சபையில் தென் பிராந்திய அநுராதபுர சாலையில் பதவி ஏற்று தொடர்ச்சியாகத் திறமையின் அடிப்படையில் பெறப்பட்ட பதவி உயர்வுகளின் பின்வடபிராந்தியத்தில்.இயங்கும்வவுனியா,முல்லைத்தீவு, பருத்தித்துறை' கோண்டாவில், போக்குவரத்துச் சபையின் சாலையில் தொடர்சியான முறையே 1972 ம்ஆண்டில் இருந்து 1984 ம் ஆண்டு வரை முகாமையாளராக பதவி ஏற்று ஊழியர்களின் நன் மதிப்பையும் விசுவாசத்தையும்பெற்று 1984ம் ஆண்டு வடபிராந்திய போக்கு வரத்துச் சபையின் செயலாற்று முகாமையாளராக இலங்கை மத்திய போக்கு வரத்து சபையினால் பதவி உயர்வு பெற்று 2001ம் 13ம் திகதி வரை சேவை ஆற்றினார் இவரின் சேவையாவும் மக்களின் தேவைகளை கொண்டவையாகும் என்பதை எம்மால் மறுக்கவோ, மறக்கவோ முடியாதவை' இவற்றை நாம் மதித்து வாழ்துகின்றேம்,.

## வரவேற்கின்றோம்

(எம் மக்களின் தேவைகளுக்காக)

2001-4-14 திகதி புதுவருடதினத்தன்று [இலங்கை மத்திய போக்குவரத்து சபையின் பணிப்புரையின் கீழ் பொது முகாமையாளராகப் (வ.பி.போ.ச) பதவி ஏற்றமை எங்கள் சாலைகளின் வளர்ச்சிக்கும் ஊழியர்களின் மதிப்புக்கும் உரியவையாகும்-

கௌரவ புதிய பொதுமுகாமையாளரை வருக வருக என வரவேற்கின்றோம்;

நலன் விரும்பிகள், தொழிலாளர்கள்
வடபிராந்திய போக்குவரத்துச் சபை
கோண்டாவில் சாலை,
யாழ்ப்பாணம்;

[கி-1795]

## இன்று ஒரு தகவல்

### முழுமையை அறியவேண்டும்

எதையும் சரிவரத் தீர்க்கமாக ஆராயாமல் திட்டவட்டமான முடிவு எதுவுமின்றி கருத்துக்களைப் பின்பற்றுபவர்களேமாமவர்களின் அதிகமாகவுள்ளனர். சமயமெய்பாத்திரத்தில் கறிக்குத் தேவையான அனைத்துப் பாகங்களும் சேர்க்கப்பட்டது உண்மை. சமையல் செய்யப்பட்டது உண்மை. ஆனால் அரைகுறை அவியலுடன் கறியை இறக்கியதே தவறு. ஆனால் ருசித்தவர்கள் அனைத்தும் சேர்க்கப்பட்ட உண்மை பற்றிக் கூறுகின்றார்களேயன்றி கறி அரைகுறையாக அவித்த நிலையில் இறக்கப்பட்டதைப் பற்றிக் கூறுவாரில்லை.

யதார்த்த கல்வி உலகில் பிரகாசிப்பவர்கள் சிலரும் கூட ஒருவரை யொருவர் அரைகுறைப் படிப்புப் படித்தவர்கள் என மட்டம் தட்டுவதும் உண்டு. ஆனால் இது பற்றித் தெளிவான விளக்கத்தைச் சரியாகப் பெறுவதிலும் சிக்கல். ஏனெனில்லல்லோருமே சொல்வது பொருத்தமானதே என்றும் முழுமையான முடிவை உய்த்தறிவதிலேயில்லை தொகுத்தறிவதிலேயே முழு வெற்றி தங்கியுள்ளது என்பதை விளக்க ஒரு கதை.

குருடர்கள் யானையைப் பற்றிக் கேட்டுள்ளார்களே அன்றிக் கண்டவர்கள் அல்ல. ஐந்துகுருடர்கள்யானையைத் தொட்டுணர்ந்து அறிந்து கொள்ளச் சென்றார்கள். இவர்களில் ஒருவன் யானையின் உடம்பைத் தடவிப் பார்த்து யானை சுவரைப் போன்றது என்ற முடிவுக்கு வந்தான். இன்னொருவன் காதைத் தடவிப் பார்த்து அது சுளகைப் போன்றது என்றான். காலைத்தடவிய மற்றொருவன் யானை உரலைப் போன்றது என்றான். தும்பிக்கையைத் தடவிய ஒருவனோ இல்லை யானை உலக்கை போன்றது என்றான். இன்னொருவனோ வாலைத்தடவி மாறாக அது குஞ்சம் போன்றது என்றான்.

ஆனால் இவர்கள் ஐவரும் தமது உய்த்தறிவுணர்தல் மூலம் தாம் சொல்வதே யானையின் உருவம் என்பதை வலியுறுத்தினர். ஐவரும் யானையைத் தொட்டுணர்ந்தது உண்மை, அவர்கள் ஒவ்வொருவரும் கூறியதும் உண்மை, ஆயின் முடிவுக்கு இவருடைய கருத்துக்களும் ஒன்று சேர்ந்தாலேயே அவற்றைத் தொகுத்து அங்கு முழுமையான யானையைக் காண முடியும் என்பதைத் தெளிவுபடுத்தக் கண்ணுள்ள ஒருவரின் உதவி தேவை என்பதே முடிவு.

எனவே, நாம் எதையும் சரிவரத் தெரியாமல், எழுதவோ கதைக்கவோ கூடாது என்பதை எல்லோரும் உணர்வோமாக.

தொகுப்பு
மு. விக்னேஸ்வரன்
கோப்பாய்

# யுத்தத்திற்கு செலவிடப்படும் பணம் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படும்

## அனுருத்த தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்திற்காகப்பயன்படுத்தப்படும் பெருமளவிலான நிதியைவிரைவில்நாட்டின்அபிவிருத்திக்குப் பயன்படுத்தப் போவதாக அமைச்சர் ஜெனரல்அனுருத்தரத்வத்த தெரிவித்துள்ளார்.

காலியில் மின் விநியோகத் திட்டம்ஒன்றினை ஆரம்பித்து வைத்த பின்னர் உரையாற்றுகையிலேயேஅவர்மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்; அரசாங்கம் தற்போது யுத்தத்தை நிறுத்தி நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான சூழ் நிலையை உருவாக்கிவருகிறது.

அதேவேளை இரண்டாயிரத்து நான்காம்ஆண்டளவில் நாட்டில் உள்ள சகல மக்களுக்கும் மின் விநியோகத்தை வழங்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார். (க 4)

## ஆங்கிலம் பயில வேண்டுகோள்

(வடமராட்சி கிழக்கு)

பருத்தித்துறை பகுதியில் அமைந்துள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கிளையில் கடமையாற்றும் தொண்டர்கள் ஆங்கிலம்மற்றும் சிங்களப் பாடம் பயிலவேண்டுமென அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் 50 ரூபா செலுத்தி மேற்படி பயிற்சியைப் பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-43)

## விளையாட்டுப் போட்டி

[ஏழாலை]

வலி. வடக்குப்பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனம் நடத்தும்இளைஞர் கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டி மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு அரங்கில் எதிர் வரும் வியாழக்கிழமை பி. ப 2. 00 மணிக்கு வலி. வடக்கு இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் செல்வன் தி.பிரபாகரன்தலைமையில் நடைபெறவுள்ளது. (க-12)

## கிரேசியா உதவி

[லண்டன்]

கடற்படையினரின் பலத்தை அதிகரிக்கும் முகமாகஅதிவேகம் கொண்ட படகுகளைத் தயாரிப்பதற்கு கிரேசியா நாடு இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளது.

உலகில் அதி வேகப் படகுகளை உற்பத்தி செய்யும் நாடுகளில் கிரேசியா நாடு முன்னணியில் இருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

## ஆசிரியர்கள் அதிருப்தி

(வவுனியா)

கிண்ணியா கல்வி அலுவலகத்தில் கல்விஅதிகாரிகளுடன் ஏற்பட்ட சம்பளப்பிரச்சினை காரணமாக அங்குள்ள சிலரால் ஆசிரியர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார்.

ஆசிரியர் தாக்கப்பட்ட சம்பவத்தையடுத்து முள்ளிப்புத்தானைச் சேர்ந்த 11பாடசாலையின் ஆசிரியர்கள் பாடசாலைப் புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். [உ-5]

## உப- பீடாதிபதி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வியியற் கல்லூரி 1 ஆம், 2 ஆம் வருட ஆசிரிய மாணவர்கள் அனைவரையும் இன்று கல்வியியற் கல்லூரி வளாகத்தில் ஒன்று கூடுமாறு அக் கல்லூரி உப- பீடாதிபதி கேட்டுள்ளார். (க-122)

## திருமலை-யாழ் கடல் போக்குவரத்தில் இந்தியக் கப்பல்கள்

(கொழும்பு)

வடபகுதிக்கான பயணிகள் கப்பல் சேவையில் இனிமேல் இந்தியக் கப்பல்கள் ஈடுபடவுள்ளன.

இந்தியக் கப்பல் போக்குவரத்து நிறுவனங்களுடன் அரசு இது குறித்த பேச்சுக்களை நடாத்தியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தியக் கப்பல்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் பட்சத்தில் முன்னரை விட அதிக பயணிகள் கப்பல் பயணத்தைமேற்கொள்ள முடியும் என நம்பப்படுகிறது. (உ-4)

## புலிகள் வசமுள்ள பகுதிகள் சனத்தொகை கணிப்பீடு

(கொழும்பு)

இராணுவக் கட்டுப்பாடற்ற புலிகள் வசமுள்ள பகுதிகளில் மக்கள் தொகையினைக் கணக்கெடுப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் அடுத்த சில தினங்களில் ஆரம்பமாகுமென புள்ளி விபரம் மற்றும்சனத்தொகைக் கணக்கெடுப்புத் திணைக்களம்தெரிவித்துள்ளது.

இதற்கான பாதுகாப்பமைச்சின் அனுமதி திணைக்களத்திற்குக் கிடைத்துள்ளதாக திணைக்கள ஆணையாளர் நாயகம் ஏ பி டபிள்யு நாணயக்கார தெரிவித்துள்ளார். (உ 4)

## விளையாட்டின் போது காயமடைந்த மூவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(மந்திகை)

வெவ்வேறு இடங்களில் விளையாடிக் கொண்டிருந்த வேளை காயமடைந்த மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் விளையாடிக் கொண்டிருந்த வேளை சகமாணவனுடன் மோதுண்டதில் கை முறிந்த நிலையில் யோகேந்திரன் கஜேந்திரன் என்பவரும்,

கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றிய வேளை துரைராசா ராஜ்குமார் (வயது 14)என்பவரும்,

நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற உதைபந்தாட்டத்தின் போது பந்து வயிற்றுப்பகுதியைத் தாக்கியதில் பத்மநாதன் பிரசாந் (வயது 14)என்பவரும் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காகப் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-23)

## மெலிஞ்சிமுனைக்கிராமக் கல்வி நிலை உயர்வு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனைக் கிராமத்தில் மாணவர்களின் கல்வி நிலையினை மேம்படுத்தும் வகையில் அப்பகுதிப் பொது அமைப்புகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு நல்ல பலன் ஏற்பட்டு வருவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வகையில், என்றுமில்லாதவாறு இம்முறை இக்கிராமத்தைச் சேர்ந்த ஐவர் க. பொ. த உயர்தரத்தில் கல்வி பயிலும் அனுமதியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-75)

## ஆத்திரம் கொண்டோர் ஆலய வேலியை அழித்தனர்

(ஈச்சமோட்டை)

தமது முயற்சி கை கூடாததால்ஆத்திரம் கொண்டோர் ஆலய வேலியை அழித்த சம்பவம் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

வடடுக்கோட்டை கண்ணகி அம்மன் ஆலய சூழலில் இடம் பெற்ற இவ் விடயம் தொடர்பாக அறியப்படுவதாவது,

மேற்படி ஆலயத்தின் அருகிலிருந்த காணி ஒன்றினை சிலர் விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்த முற்பட்டமைக்கு, ஆலயத்தின் அமைதிக்கு பங்கம் ஏற்படும் என்ற காரணத்தினால் நிர்வாகத்தால் அனுமதி மறுக்கப்பட்டது.

இதனால் ஆத்திரமடைந்தவர்கள் கடந்த செவ்வாயன்று இரவு ஊரடங்கு வேளையில் ஆலயத்தின் சுற்றுவேலியில் ஒரு பகுதியை அழித்துள்ளனர்.

இச்சம்பவத்திற்கு அப்பகுதி வாழ் மக்கள் பெரும் எதிர்ப்புத் தெரிவித்ததுடன், இவ்வாறான செயல் புரிபவர்களைத் தட்டிக் கேட்கத்தயாராகிவருவதாகவும் கூறப்படுகிறது. [உ-59]

## உப்புக் கூட்டுத்தாபன ஊழியர் சம்பளம் வியாழக்கிழமை அன்று

[யாழ்ப்பாணம்]

இலங்கை உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான 1997 ஆம் ஆண்டுக்குரிய ஒரு வருடச் சம்பளம் எதிர்வரும் வியாழக்கிழமையன்று காலை 9.00 மணிதொடக்கம்10.30 மணி வரையும்யாழ். செயலக இலங்கை வங்கிக்கிளையில் வைத்து வழங்கப்படவுள்ளதாக ஊழியர்சங்கத்தலைவர் தெரிவித்துள்ளார்.

உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்கள் தேசிய அடையாள அட்டையுடன் நேரில் வந்து தமக்குரியசம்பளத்தினை பெற்றுச் செல்லுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த வெள்ளியன்று இச்சம்பளக்கொடுப்பனவுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்த போதும் ஊழியர்களுக்கு தகவல் அனுப்ப முடியாத காரணத்தால் சம்பளம் வழங்கல் எதிர்வரும் வியாழமைக்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (க-9)

## பரீட்சையின் போது ஏற்படும் செலவுகளை வழங்க நடவடிக்கை

(மானிப்பாய்)

தட்டெழுத்தாளர் சேவை மற்றும் சுருக்கெழுத்தாளர் சேவையின் வினைத் திறமை காண் தடைப் பரீட்சைக்கு தோற்றும் அலுவலர்கள் அப் பரீட்சைக்கான தட்டச்சுஇயந்திரங்களைக் கொண்டு செல்லும் போது ஏற்படும் செலவுகள் வழங்கப்படுமென்று அரசாங்க நிருவாகஉள்நாட்டலுவல்கள் நிர்வாகமறுசீரமைப்பு அமைச்சு சகல திணைக்களத் தலைவர்கள், செயலாளர்கள் பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு சுற்று நிருபமொன்றைஅனுப்பிவைத்துள்ளது.

இதற்கமைய மாவட்டத்திற்கு உள்ளேயுள்ள பரீட்சை நிலையத்திற்கு ஆகக் கூடியது 300ரூபாவும்மாவட்டத்திற்கு வெளியேயுள்ளபரீட்சைநிலையத்திற்கு 500 ரூபாவும் வழங்கப்படும்.

இக் கொடுப்பனவுகள்பரீட்சைக்கு முதற்தடவையாக தோற்றுவோருக்கு மாத்திரமே வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-120)

## விளையாட்டுப் போட்டி முடிவுகள் வெளியாகின

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் உள்ள இளைஞர் கழகங்களிடையே இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வுகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

- உதைபந்தாட்டம்; முதலாம் இடம்- தம்பாட்டி காந்திமதி இளைஞர்கழக அணி,இரண்டாம் இடம்- மெலிஞ்சிமுனை உதயகீதம் இளைஞர்கழக அணி,மென் பந்து துடுப்பாட்டம்: முதலாம் இடம்- மெலிஞ்சிமுனை உதயகீதம் இளைஞர்கழக அணி,இரண்டாம் இடம்- காரை நகர் களபூமி இளந் தென்றல் இளைஞர் கழக அணி,கரப்பந்தாட்டம்; முதலாம் இடம்- ஊர்காவற்றுறை இளங்கதிர் இளைஞர் கழக அணி, இரண்டாம் இடம்- தம்பாட்டி காந்திமதி இளைஞர்கழக அணி. [உ-75]

### மாஓ தீவிரவாதிகள்

# சுற்றிவளைத்துத் தாக்குதல்

# அப்பாவிப் பொதுமக்கள் பலி

[புதுடில்லி]

ஜார்க்கன்ட மாநிலத்தில் மாஓ தீவிரவாத கம்யூனிஸ்ட்டுகள மேற்கொண்ட தாக்குதலில் 14 கிராமவாசிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆயிரத்திற்கும் அதிகமான மேற்படி தீவிரவாதக்குழுவைச் சேர்ந்தோர் இம் மாநில கிராமம் ஒன்றைச் சூழ்ந்து தாக்குதல் நடத்தியதிலேயே இவர்கள் கொல்லப்பட்டதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை, இறந்தவர்களில் பெரும் பாலானோர் கிராம பாதுகாப்பு உத்தியோகத்தர் எனத் தெரியவந்துள்ளது. [து]

### மோல்டோ நாட்டில்

# சரித்திரப் பிரசித்தி வாய்ந்த கற்பாறைத் தொடர்அழிப்பு

[மோல்டோ]

5ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கற்பாறைத் தொடர்கள் மோல்டோ நாட்டில் இனந்தெரியாதோரால் அழிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கவலை தெரிவித்த அந் நாட்டு அகழ்வாராய்ச்சி ஆய்வாளர்கள், இதுவரை 60 கற்பாறைகள் இவ்வாறு இடித்தழிக்கப்பட்டுள்ளதாகவும்,

ஆயிரம் வருடங்கள் பழமை வாய்ந்த பிரித்தானியக் கற்பாறைத் தொடரிலும் இத் தொடர்கள் பிரசித்தி பெற்றதெனவும் தெரிவித்துள்ளனர்.

இக் கற்பாறைத்தொடரை யுனெஸ்கோ நிறுவனம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தளமாகப் பிரகடனப் படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-2)

# காஸாப் பகுதியில் கடும் யுத்தம் மூண்டது

கடந்த புதனன்று இஸ்ரேலின் யுத்தத் தாங்கிகளும் புல்டோசர்களும் பலஸ்தீனத்தில் உள்ள காஸா அகதி முகாமுக்குள் நுழைந்த போது பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலியப் படையினருக்கும் இடையில் பெரும் மோதல்கள் வெடித்தன.

காஸாவில் உள்ள கான்யூனுஸ் முகாமுக்குள் இரு யுத்தத் தாங்கிகள் சகிதம் நுழைந்த இஸ்ரேலியப் படையினர் அங்கிருந்த பலஸ்தீனப் படைகள் மீது கடும் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனையடுத்து வெடித்த பெரும்மோதலில் இருதரப்பும் சரமாரியாக வேட்டுக்களை தீர்த்துக் கொண்டன

இச் சமயம் பலஸ்தீனர்கள் ''அல்லாஹு அக்பர்'' எனக் கோஷமிட்டவாறு தாக்குதல் நடத்தியதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ-9)

# போதை பொருள் கடத்திய 14 பேர் ஈரானில் கைது

[ஈரான்]

ஈரானின் வடமேற்குப் பிரதேசமான கோரஸ்தானில் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்த 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி கடத்தல்காரரைக் கைதுசெய்த ஈரானியப்பொலிஸார் அவர்களிடமிருந்து 184 கிலோ கிராம் அளவிலான போதைப் பொருட்களைக் கைப்பற்றியுள்ளனர்.

இதில் 132 கிலோ கிராம் ஹெரோயினுடன் கைத்துப்பாக்கி மற்றும் வெடி மருந்துகளும் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் கடந்த மாதத்தில் மட்டும் ஈரானில் 190 தொன் எடையைக் கொண்ட போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-2)

# பிரதமரின் அழைப்பை காங்கிரஸ் உதாசீனம்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் அடெல் பிஹாரி வாஜ்பாயினால் அழைப்பு விடுக்கப்பட்ட கூட்டம் ஒன்றினை பிரதான எதிர்க் கட்சியான காங்கிரஸ் கட்சி நிராகரித்திருக்கிறது.

ஆயுதக் கொள்வனவில் ஊழல் நடைபெற்றதாகக் கூறி கடந்த மாதத்தில் 8 நாட்களாக பாராளுமன்றத்தில் நிலவி வந்த குழப்ப நிலையைச் சீர் செய்யும் வகையில் பாராளுமன்ற ஒத்துழைப்புடன் இணக்கம் ஒன்றைக் காண்பதற்காகவே பிரதமரினால் கூட்ட நிகழ்வொன்றிற்கு எதிர்க்கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந் நிகழ்வை நிராகரித்ததுடன் இந்தியக் கூட்டணி அரசு பதவி விலக வேண்டும் எனவும் எதிர்க் கட்சி கோரியிருக்கின்றது. [உ-2]

### உலக தரிசனம்

# கம்யூனிஸ் கட்சிக்கு 8 இடங்கள்

(சென்னை)

தமிழக சட்டசபைத் தேர்தலில அ இ அ தி.மு க எட்டு இடங்களை இந்திய கம்யூனிஸ் கட்சிககு ஒதுககியுள்ளது.

தொகுதி ஒதுக்கீட்டால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் விரக்தியடைந்துள்ளனர். ஏற்கனவே ...ங்கள் தொடர்ந்து வந்த தொகுதிகளைத் தங்களுக்கு விட்டுத் தரவில்லையென்று விரக்தியடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இந்திய கம்யூனிஸ் கட்சியின் செயலாளர் இராஜா கருத்துத் தெரிவிக்கையில்; தமிழகச் சட்டசபைத் தேர்தலில் அ.இ.அ தி.மு.க எங்களுக்கு எட்டு இடங்களை ஒதுக்கித் தந்துள்ளது. தொகுதி ஒதுக்கீட்டால் இந்திய கம்யூனிஸ் கட்சிக்கு தரவேண்டிய தொகுதிகள் தரப்படவில்லை. மேலதிகம் கேட்ட தொகை தரப்படவில்லை. இது தொடர்பாக பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதால் சில நன்மைகள் கிடைத்த போதும் மன நிறைவு அடைய முடியாதென்றும் தாங்கள் நினைத்திருந்த தொகுதிகள் பறி போயுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் தேசிய ரீதியில் பாரதீய ஜனதாக்கட்சியையும் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் ஆட்சியிலிருந்து அகற்றுவதே எமது நோக்கமாகையால் சிலவேதனைகளையும் தாங்கிக்கொள்ள வேண்டியுள்ளது என்று இராஜா தெரிவித்தார். (து)

# உச்ச நீதிமன்றத்தை எதிர்த்து ஜெயலலிதா வழக்குத் தாக்கல்

(சென்னை)

சட்ட சபைத் தேர்தலில் செல்வி. ஜெயலலிதாபோட்டியிடுவது பற்றி தீர்மானிக்கும் உரிமை தேர்தல் ஆணையத்திற்கு மட்டுமே உண்டு என உச்ச நீதிமன்றம் தீர்ப்புவழங்கியுள்ளது;

இக் கருத்தை ஏற்பதுபோல் முதல்வர் கருணாநிதியும் கருத்து கூறியிருக்கிறார். நீதிமன்றம் இத் தீர்ப்பை வழங்கியிருந்தாலும் தான்தேர்தலில் போட்டியிடப் போவதாகவும் அதற்கான உத்தரவை உச்ச நீதிமன்றமே தேர்தல் ஆணையத்திற்கு வழங்க வேண்டும் என்றும்வழக்குதாக்கல்செய்ய இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இருந்த போதிலும் தமிழக அரசும் எதிர்த்து வழக்குதாக்கல் செய்ய இருக்கின்றன. (து)

# சோனியா மீது பலத்த குற்றச்சாட்டு காங்கிரஸ் சட்சியில் குழப்பம்

[புதுடில்லி]

காலம் சென்ற இந்திய முன்னாள் பிரதமரின் மனைவியான சோனியா காந்தி மீது சுப்பிரமணியசுவாமி சுமத்திய குற்றச் சாட்டுகள் சூடுபிடித்திருப்பதாக புதுடில்லிச் செய்தியில் தெரிவித்துள்ளன.

தெஹெல்கா ஆயுத ஊழல் விவகாரம் தொடர்பாக பாராளுமன்றத்தில் சர்ச்சையை கிளப்பவுள்ள காங்கிரஸ் கட்சிக்கு சுப்பிரமணிய சாமி விவகாரம் பெரிய தலையிடியாகத் தொடங்கியுள்ளது.

இதைச் சாட்டாக வைத்துக் கொண்டு நேற்று முன் தினம் பிரதமர் வாஜ்பாய் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் காங்கிரஸ் கட்சி புறக்கணித்துள்ளது.

இதே கூட்டத்தில் மத்திய புலனாய்வுத்துறை சோனியா காந்தி மீது விசாரணை நடத்தாது என்று தெரிவித்திருந்த போதிலும் காங்கிரஸ் குழம்பிப் போயிருக்கிறது.

இருந்த போதிலும் வரவு செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் எதிர்க் கடசிகள் தெஹெல்கா விவகாரத்தை குறிதைத்து ஆளும் கட்சியைத் தாக்க முனைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்தே சமாதானப் படுத்தவும் பிரச்சினைகளைக் குறைக்கவும் விளங்கம்படுத்தவும் வாஜ்பாய் சர்வ கட்சி மகா நாட்டைக் கூட்டியிருந்தார். [து]

### விபத்தில் காயம்

[யாழ்ப்பாணம்]

நேற்று முன் தினம்சனிக்கிழமை யாழ். பஸ்தரிப்பிடத்துக்கு அண்மையில் ஏற்பட்ட மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் கொட்டடி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தமோகன் பார்த்தீபன் [வயது 13] என்பவரேகையில் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காகயாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [உ-10,6

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஏப்ரல் மாதம் 08ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றது.

### மருதங்கேணி

| | |
|---|---|
| 185605 ஏ | 185606 ஏ |
| 185607 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 171382 ஏ | 179712 ஏ |
| 184283 ஏ | 184296 ஏ |
| 184296 பி | 184315 ஏ |
| 184315 பி | 187436 ஏ |
| 187581 ஏ | 187581 பி |
| 187581 சி | 187585 ஏ |
| 187588 ஏ | 187921 ஏ |
| 187921 பி | 187929 ஏ |
| 187936 ஏ | 187936 பி |
| 187946 ஏ | 187947 ஏ |
| 187947 பி | 187947 சி |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 156883 ஏ | 169782 ஏ |
| 181189 பி | 181385 ஏ |
| 183598 ஏ | 183598 பி |
| 183598 சி | 183598 டி |
| 183598 ஈ | 183598எப் |
| 18[illegible]677 ஏ | 183847 ஏ |
| 183847 பி | 183846 சி |
| 183847 டி | 183980 ஏ |
| 183980 பி | 183980 சி |
| 184018 ஏ | 185348 ஏ |
| 185413 ஏ | 185450 ஏ |
| 185450 பி | 185472 ஏ |
| 185473 ஏ | 185473 பி |
| 185540 ஏ | 185633 ஏ |
| 185633 பி | 185656 ஏ |
| 185679 ஏ | 185683 ஏ |
| 185683 பி | 185683 சி |
| 185701 ஏ | 185705 ஏ |
| 185713 ஏ | 185763 ஏ |
| 185797 ஏ | 185818 ஏ |
| 185823 ஏ | 188105 ஏ |
| 188105 பி | 188151 ஏ |
| 188216 ஏ | 188239 ஏ |
| 188239 டி | 188292 ஏ |
| 188293 ஏ | 188380 ஏ |
| 188459 ஏ | 188459 பி |

### உடுவில்

| | |
|---|---|
| 184082 ஏ | 184266 ஏ |
| 184274 ஏ | 187378 ஏ |
| 187903 ஏ | 187926 ஏ |
| 187926 பி | 187952 ஏ |
| 187952 பி | 187952 சி |
| 187952 டி | 187952 ஈ |
| 191255 ஏ | 191255 பி |

ஏப்ரல் மாதம் 09ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக அனுப்பப்பட்டுள்ளது:

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 181195 ஏ | 185564 ஏ |
| 185564 பி | 185564 சி |

### கரவெட்டி

| | |
|---|---|
| 164531 ஏ | 166920 ஏ |
| 167365 ஏ | 169748 ஏ |
| 169948 பி | 180404 ஏ |
| 182330 ஏ | 182416 ஏ |
| 182416 பி | 182416 சி |
| 182416 டி | 182416 ஈ |
| 182488 ஏ | 183575 ஏ |
| 183575 பி | 183634 ஏ |
| 183731 ஏ | 183731 பி |
| 183822 ஏ | 183843 ஏ |
| 183848 பி | 183848 சி |
| 183866 ஏ | 183866 பி |
| 183866 சி | 183866 டி |
| 183896 ஏ | 183910 ஏ |
| 183910 பி | 183910 சி |
| 183910 டி | 185335 ஏ |
| 185440 ஏ | 185471 ஏ |
| 185471 பி | 185490 ஏ |
| 185506 ஏ | 185506 பி |
| 185514 ஏ | 185514 பி |
| 185553 ஏ | 185553 பி |
| 185558 ஏ | 185568 ஏ |
| 185568 பி | 185570 ஏ |
| 185603 ஏ | 185615 ஏ |
| 185640 ஏ | 185644 ஏ |
| 185718 ஏ | 185721 ஏ |
| 185721 பி | 185724 ஏ |
| 185724 பி | 185772 ஏ |
| 185772 பி | 185809 ஏ |
| 188137 ஏ | 188170 ஏ |
| 188[illegible]70 பி | 188170 சி |
| 188171 ஏ | 188347 ஏ |
| 188375 ஏ | 188396 ஏ |
| 188433 ஏ | 188433 பி |
| 188451 ஏ | 188462 ஏ |
| 188472 ஏ | 188476 ஏ |
| 188476 டி | 188517 ஏ |
| 188542 ஏ | 188542 பி |
| 188561 ஏ | 188561 பி |
| 188574 ஏ | 189816 ஏ |
| 189816 பி | 189850 ஏ |
| 189903 ஏ | 189903 பி |
| 189903 சி | 189903 டி |
| 189903 ஈ | |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 162227 ஏ | 162227 பி |
| 180458 ஏ | 182451 ஏ |
| 182518 ஏ | 1825[illegible]8 பி |
| 183687 ஏ | 183687 பி |
| 183687 சி | 183687 டி |
| 183711 ஏ | 183711 பி |
| 183914 ஏ | 183914 பி |
| 183934 ஏ | 183943 ஏ |
| 185497 ஏ | 185536 ஏ |
| 185539 ஏ | 185628 ஏ |
| 185628 பி | 185628 சி |
| 185628 டி | 185628 ஈ |
| 185726 ஏ | 185758 ஏ |
| 188376 ஏ | 188420 ஏ |
| 188472 ஏ | 188528 ஏ |
| 188528 பி | 188528 சி |
| 188501 ஏ | 189821 ஏ |
| 189821 பி | 189821 சி |
| 189831 ஏ | 189908 ஏ |

கற்றாருள் கற்றரர் எனப்
படுவா கற்றார் முன்
கற்ற செலச் சொல்லுவார்

- குறள்

# வலம்புரி

## ஆதீனமுதல்வர் விடுத்த வேண்டுகோள்

இனப்பிரச்சினையை யுத்தத்தால் அன்றி பேச்சு வார்த்தை மூலமாகவே தீர்க்க முடியும். அதுவே நிலையானது. அத்தகைய தீர்வு ஏற்படுவதற்கு அனைவரும்ஒன்றுசேர்ந்து பாடுபடவேண்டும் இவ்வாறு புத்தாண்டுச் செய்தியில் நல்லை ஆதின முதல்வர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசியல் கலப்புக்கு ஒரு போதும் இடமளிக்காது ஆத்மீகசிந்தையை அடக்கமான முறையில் நம்மண்ணில் பரப்பும் நல்லை ஆதின முதல்வரின் வேண்டுகோள் சிந்திப்பதற்குரியது. காலமறிந்து உரிய நேரத்தில், உரியமுறையில்விடுத்தஅவரின் கோரிக்கை தனி நபருடையது அல்ல இலங்கை வாழ் இந்துக்கள் அனைவரையும் சமயத்தின் பால் பிரதிநிதித்துவப் படுத்தும் ஆதினத்தின் முதல்வருடையதென்பதும், இனப்பிரச்சினை தொடர்பாக அடிக்கடி அறிக்கைகள் விடுத்து ஆன்மீகத்தின் பாதையை அரசியலாக்காத இந்துமதத்தின்தலைமைத்துவத்திலிருந்து வந்த கருத்தென்பதும் நோக்குதற்குரியது.

யார் வேண்டுமானாலும் எத்தடையுமின்றி நுழையக்கூடிய அதனூடாக தமக்குப் பிரபல்யம் தேடக்கூடியதாக, இருக்கும் ஒரே ஒரு துறை அரசியல். அப்படியிருந்தும் அதற்கான சந்தர்ப்பம் பல இருந்தும் தமது சமயப் பணியில் வழுவாது இருக்கும் ஆதீன முதல்வரின் வேண்டுகோளில் நிறையவே நியாயமுண்டு. அதற்குக் கனதியுமுண்டு. புலிகளின் யுத்த நிறுத்தமும், அரசின் தாக்குதல் தவிர்ப்பும் மூன்றாந்தரப்பில் நோர்வேயின் சமாதான முயற்சியும் ஒன்று சேர்ந்திருக்கும் போது அதனைவெறுமனே பார்த்துக் கொண்டிராது எல்லோரும் ஒன்று சேர்ந்து இனப்பிரச்சினைக்கு முடிவு கட்டாவிட்டால் இப்படியானதொரு சந்தர்ப்பம் மீண்டும் ஏற்படாதென்பது திண்ணம் அதனாலேயேஆதீனமுதல்வரும் எல்லோரையும் ஒன்று திரளுமாறு கோரியுள்ளார்.

அவரின் கோரிக்கையை செவிமடுத்து தமிழினம் ஒன்று சேருமாயின் நிச்சயம் நிலையான சமாதானம் இம் மண்ணில் பிறப்பதற்கு நெடுநாள் தேவை வராது.

# புத்தாண்டுக் கவிதைகள்

## இன்பமதை இகத்தே தா

இத்தரையில் நாமுற்ற இடர்க ளெல்லாம்
இரவியின்முன் பனிபோல இல்லா தோடி
முத்தனைய மாரிமழை மல்கிவளஞ் சுரந்து
மன்னுயிர்க ளெண்ணியவை மகிழ்வோ டுற்று
தத்தையர்கள் நல்வாழ்வித் தரணி கண்டே
தழைத்திடநற் திருவருளைத் தந்து தமிழர்
சித்திரையி லுரிமைபெற்றுச் சிறந்தா ரென்ற
சேதியினை யெந்தமக்கு சீக்கிர மேதா

இராசையா குகதாசன்
நாயன்மார்கட்டு

## புத்தொளி தருக புத்தாண்டே

வானம் விடிந்தது
வையம் விழித்தது - நம்
வாழ்வு செழிக்குமென்று நெஞ்சம் நினைத்திட....
தாழ்வு இனி இல்லை என்று
கூவிக்கூவியே பூமி கூத்தடித்திட....
சித்தம் மகிழ்ந்திட....
சீர்மிகப் பொலிந்திட....
ஊர் மனை யாவினும் உள்ளம் நெகிழ்ந்திட
வந்ததே சித்திரைப் புத்தாண்டு
வாருங்கள் வரவேற்போம்
மலர் எடுத்து மாலை தொடுத்து
காலதேவனின் தோள்களில் சூடுவோம்
புதிய ஆண்டை வாழ்த்திப் பாடுவோம்

நெஞ்சம் நினைத்திடும் பசுமை நினைவுகள்
நெஞ்சம் கனத்திடும் கொடுமை நினைவுகள்
தந்து டோனது போன ஆண்டு - இனி
வந்த ஆண்டே
வையம் செழித்திடும் வழிகாண எழுந்துள்ளோம் - எம்
கையணைத்து ஒளி தருக சித்திரைப் புத்தாண்டே

நவரத்தினம் முகுந்தன்
ஜெயபுரம் கிளிநொச்சி

## புத்தாண்டே விடியலைத் தா...

அன்பு மணம் எங்கும் பரப்பிட
ஆசை அலை எங்கும் ஆடிட
இன்பவொளி எங்கும் பரவிட
ஈகையுள்ளம் அனைவரும் பெற்றிட

ஐக்கியத்தை பேணிக் காத்திட
ஒற்றுமையே பாலமென உணர்த்திட
ஓடி உழைத்து மகிழ்ந்திட
ஔவை வழியை கடைப்பிடித்திட

அஃதே துன்பங்கள் நீங்கிட
புத்தாண்டே விடியலைத் தா...

நாகமணி மகேந்திரலிங்கம்

## வருக புத்தாண்டே.

சுற்றமிழந்து சோபையிழந்து நிற்கிறோம்
தூயதான சமாதானம் ஏற்படாதோ
நற்றமிழர் நம் வாழ்வு சிறந்திடவே
நடைபயின்று புத்தாண்டே வருக வருக.

நீர்வையூர் வெ. சுதர்சினி

## புது வாழ்வு புலருமா...

ஆறுதல் அளிக்கின்ற ஆலயங்களின் அழிவுகளும்
ஊறுதலால் அழிகின்ற உறைவிட இடிவுகளும்
சீறுகின்ற குண்டுகளால் சிதைகின்ற வாழ்வுகளும்
மாறுதல் கண்டிங்கு தேறுதல் தாருங்கள்

விடையில்லா வினாவாகி முடியாத போரோலம்
உடையில்லா உடலாகி உடைகின்ற தமிழ்மானம்
தடையில்லா விடிவுடன் களங்கமிலா வாழ்வுதனில்
நடைபோடும் தமிழர் வாழ்வுக்கொளி சேருங்கள்

திருவிழா பண்டிகை பெருநாளெலாம் துதிபாடி
உருகியே கடவுளையும் காலத்தையும்
வேண்டியேது பயன்
இருக்கின்ற மானிடமே இறந்த காலம் திரும்பிடாது
வருங்காலம் வளமாக்க உளமார சிந்தியுங்கள்.

மு. வே. அன்பழகன்
மட்டுவில் தெற்கு

## அமைதித் தீர்வினை அளிப்பாய் 'விஷு' வே!

மலர்ந்தாய் ''விஷு'' வே! மகிழ்வது கொண்டோம்!
உயிர்கள் உறவுகள் உடமைகள் இழந்து
உலகம் முழுதும் அகதியாய் அலைந்து
கலங்கியே வாழும் நிலைமையை மாற்றி
உரிமைகள் பெற்று உயர்வுடன் வாழும்
உன்னதத் தீர்வினை அளித்தே இங்கு
அமைதி நிலைபெற வழிசெய் தே நீ
இதயங் களிலே நிறைந்திருப் பாயே!

ப. மகேந்திரதாசன்
நாயன்மார்கட்டு

# வலம்புரிக் கவிஞர்குடும்பம்

## அங்கத்தவர் விபரம்

01) தங்கராஜா செல்வகுமார்
ஏழாலை
02) விவேகானந்தம் பராபரன்
நீர்வேலி மேற்கு, நீர்வேலி
03) நாகேந்திரம் துஷாந்
வட்டுக்கோட்டை
04) தர்மினி கவீந்திரன்
சித்தன்கேணி.
05) இ. அ. அமலரட்ணம்
யாழ்ப்பாணம்.
06) சிவபாதம் சசிகாந்த்
திருநெல்வேலி.
07) லாவணியா கந்தசாமி
சாவகச்சேரி.
08) ம.மதிச்செல்வி
கோண்டாவில்.
09) சந்திரன் செல்வகுண சந்திரன்
பருத்தித்துறை.
10) தர்மராஜா அஜந்தகுமார்
கரவெட்டி
11) செல்வராஜா சுதாகரன்
நல்லூர்.
12) சிவபாதம் சிவகாந்த்
திருநெல்வேலி.
13) முருகேசு முத்துக்குமார்
மா ப்பாய்
14) லலிதா சிவப்பிரகாசம்
யாழ்ப்பாணம்
15) இரகுவரேந்திரன் மிதிலா
யாழ்ப்பாணம்.
16) ஆ ஜென்சன் றொனால்ட்
யாழ் பணம்.
17) சி. இராஜ்தமார்
மல்லாகம்
18) புலேந்திரராஜ் திலீப்காந்த்
கொழும்பு.
19) செல்வி சு. நளாயினி
யாழ்ப்பாணம்.
20) ஜெனிதா இராசதுரை
யாழ்ப்பாணம்.
21) சிவபாதம் ஜெயக்காந்த்
திருநெல்வேலி
22) அரியகுமார் சிறீகரன்
தாளையடி.
23) தியாகராசா மூத்துக்குமரன்
நீர்வேலி.
24) சின்னையா தயாபரன்
நவாலி.
25) சிவானந்தம் மயூறன்ராஜ்
யாழ்ப்பாணம.
26) கனகசபாபதி றணேஸ்
வவுனியா
27) சின்னத்துரை பகீரதன்
நல்லூர், யாழ்ப்பாணம்.
28) வடிவேலு தேவராசா
பருத்தித்துறை
29) சுகந்தி குணரத்தினம்
யாழ்ப்பாணம்.
30) யூடித் அருள்மலர் அருட்பிரகாசம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
31) நிருத்திகா சிவநேசன்
யாழ்ப்பாணம்.
32) குணாளன் டிலீப் அமுதன்
கோப்பாய்.
33) சதாசிவம் தாசன்
ஏழாலை.
34) பி. செங்கதிர்ச்செல்வி
யாழ்ப்பாணம்.
35) கந்தசாமி முருகதாஸ்
வல்வெட்டித்துறை
36) அன்னலிங்கம் சிவாஸ் ஈரதாஸ்
வல்வெட்டித்துறை.
37) சிவகுமாரன் அருண்சங்கர்
கரவெட்டி
38) எஸ் ரி. தவலிங்கம்
கரவெட்டி
39) முத்தையா தவேந்திரன்
சண்டிலிப்பாய்.
40) கேசவநாதன் வித்கா
நல்லூர், யாழ்ப்பாணம்.
41) எஸ். ஜமுனா
நல்லூர்.
42) சியாமளா பத்திநாதர்
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.
43) சி. யாழினி
யாழ்ப்பாணம்.
44) நாகேந்திரம் நவராஜா
கொழும்புத்துறை.
45) சிவநாதன் வேணுஷன்
நல்லூர், யாழ்ப்பாணம்.
46) ஐ. யோகானந்தன்
கரவெட்டி
47) ப. பாலசுப்பிரமணியம்
யாழ்ப்பாணம்.
48) வேலுப்பிள்ளை அன்பழகன்
சாவகச்சேரி.
49) பரராஜசிங்கம் சந்திரகுமார்
யாழ்ப்பாணம்.
50) சிங்கராஜா ஜெகன்
கரவெட்டி.

(தொடரும்)

அற்புதமான வடிவமைப்புக்களைக் கொண்ட அழகிய தங்க நகைகளுக்கு நங்கையர் நாடும் இடம்

**நியூ ராதிகாஸ் நகை மாளிகை**

189, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

(இ/ 1770)


# எதிர்க்கட்சித்தலைவர் ரணில் நோர்வே அதிகாரிகளுடன் சந்திப்பு

(கொழும்பு)

நோர்வேயில் தற்போது தங்கியுள்ள ஐக்கிய தேசியக் கட்சித்தலைவரும் எதிர்க்கட்சித்தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக நோர்வே அதிகாரிகளைச் சந்தித்துப்பேசியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்காவின் அதிகாரிகள் மட்டப்பேச்சுவார்த்தையை அடுத்து இலங்கையின்இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்மையும் சிலதினங்களில் சந்தித்துப்பேசவுள்ளார்.

நோர்வேயின் விசேட தூதுவர் தற்போது விடுமுறையில் இருப்பதால் அவருடனான பேச்சுவார்த்தை எப்போது நடைபெறும் என்றுகூறமுடியாவிட்டாலும் எரிக்சோல் ஹெம்மைச் சந்தித்த பின்னரே எதிர்க்கட்சித்தலைவர் நாடுதிரும்புவார் என ஐக்கிய தேசியக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ

## சமாதானப்பேச்சுவார்த்தை நாட்டை துண்டாடும்முயற்சி என்கிறது சிஹல உறுமய

[கொழும்பு]

விடுதலைப்புலிகளின் வலையில் சிக்குவதற்காகவே அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைக்குச் செல்கிறது. இவ்வாறு சிஹல உறுமயக் கட்சியின் உறுப்பினர் திலக் கருணாரத்ன பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் முதல் வாரத்திற்குள் கிளிநொச்சியை மீண்டும் கைப்பற்றுவோம் என்றும், கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் விசேட அதிரடிப் படை தகர்த்தப்படும் என்றும் மக்களுக்கு அரச உயர்தலைவர்கள் வாக்குறுதி அளித்த போதிலும், ஏன் பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

சமாதானப் பேச்சுவார்த்தை நாட்டைத் துண்டாடுவதற்கே வழி வகுக்கும் என்றும் அவர்மேலும்தெரிவித்துள்ளார். [செ]

## துறை முகங்களில் பணியாற்றுவோர் வேலை இழக்கும் அபாயம்

[கொழும்பு]

உலக வங்கியின் நெருக்குதலினால் துறைமுகங்களில் வேலை செய்வோர் வேலையை இழக்கும் அபாயம் நெருங்கியுள்ளதாக அஞ்சப்படுகிறது.

உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் நெருக்குதலுக்குள்ளாகியுள்ள இலங்கை அரசு பாரிய பொருளாதார மறுசீரமைப்புத் திட்டத்தை மேற்கொள்வதற்குதயாராகிவருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் துறைமுக அதிகார சபையிலும் நிதித்துறைசார் நிறுவனங்களிலும் ஆயிரக்கணக்கானோர் வேலைகளை இழக்கும் நிலை உருவாகும் என்று அஞ்சப்படுகிறது.

அத்துடன், இத்துறைகளில் எஞ்சியிருக்கும் ஊழியர்களின் வேலை நிலைமைகளும் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. [செ]

## தடியால் தாக்கி தலையில் காயம்

உறவினர்களுக்கு கிடையில் ஏற்பட்ட தகராறில் தடியால் தாக்கப்பட்டுத் தலையில்காயம் அடைந்த நிலையில்கோப்பாய் மத்தியைச் சேர்ந்த சின்னத்துரை கேமராசா [வயது 33] என்பவரே யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (உ-10,6)

## செய்தியில் உண்மையில்லை அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மார்ச் மாதம் 5ந் திகதி வலம்புரியின் 7ம் பக்கத்தில் மயக்கமுற்ற மாணவன் ஆஸ்பத்திரியில் அனுமதியென வெளிவந்த செய்தியில் எதுவித உண்மையுமில்லையென குறிப்பிட்ட பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

வலிப்பு காரணமாகவே மேற்படி மாணவன் மயக்கமுற்றதாகவும் செய்தியில் வெளிவந்ததுபோல் எதுவிதமான சம்பவமும் நடைபெறவில்லையெனவும் அதிபரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறிப்பிட்ட பாடசாலையின்உயர். மாணவர் மன்றமும், சம்பவத்துடன் தொடர்புடைய மாணவனும் குறிப்பிட்ட செய்தியில் உண்மையில்லையென மறுத்துள்ளனர்.

செய்தி தவறெனில் அதற்காக மனம்வருந்துகிறோம் (ஆ-ா)

## கார் மோதியது

[யாழ்ப்பாணம்]

வீதியோரத்தில் மோட்டார் சைக்கிளுடன் நின்ற மாணவன், கார் மோதியதில் காலில் பலத்த காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புத்தூர்ப் பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அச்சுவேலியைச் சேர்ந்த ந அனுசகுமார் (வயது 20) என்பவரே காயமடைந்துள்ளார். [உ-10]

## இளைஞர் கையில் காயம்

(யாழ்ப்பாணம்)

புகையிலை வெட்டும் தொழிலில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் கையில காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, குப்பிளானைச் சேர்ந்த அன்ரனி அல்பிரட் (வயது 29) என்ற இளைஞனே காயமடைந்தவராவார். [க-2-10]

## சைவப்புலவர் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தால் நடத்தப்படும் சைவப்புலவர், இளம் சைவப்புலவர்களுக்கான பரீட்சை இம்மாதம் 28,29, 30 ஆம் திகதிகளில் யாழ். நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகஅகில இலங்கைச் சைவப்புலவர் சங்க தேர்வுச் செயலாளர் வ.கந்தசாமி தெரிவித்தார். (உ-6)

## சீனி விலை குறைப்பு!

[மந்திகை]

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சீனி விலை குறைக்கப்பட்டுள்ளது.

40 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட சீனி 39 ரூபாவாகக்குறைக்கப்பட்டுள்ளது. [உ-23]

## பொதுக் கூட்டம்

[மந்திகை]

வடமராட்சிதெற்கு மேற்கு பிரதேச செயலக ஊழியர் நலன் புரிச் சங்கத்தின் வருடாந்தப்பொதுக்கூட்டம்எதிர் வரும் 18 ஆம திகதி புதன் கிழமைபி ப2 00 மணிக்குபிரதேசசெயலகமாநாட்டுமண்டபத்தில் நடைபெறுமென சங்கத்தின் செயலாளர் எ எம். யோசேப் அறிவித்துள்ளார். [உ-23]

## இளைஞனை

இதுவரை வீடுதிரும்பவில்லையென மந்திகை ஈ.பி.டி.பி காரியாலயத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புலோலி தெற்குபுற்றளையைச்சேர்ந்த உயர்தரவகுப்பு மாணவன் பரமநாதன் பிரதீபன்(வயது19) என்பவரே காணாமல் போயுள்ளாரென்று முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது. (இ-2)

## ஈழத்தமிழர்கள்

சிததொண்டர்கள் கலந்து கொண்ட மாநாட்டுக்கு. கட்சித் தலைவர் வைகோபாலசாமி தலைமை தாங்கினார்.

மாநாட்டில் கலந்து கொண்ட தொண்டர்கள் அணிந்திருந்த ஆடைகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் படமும் வை- கோபாலசாமியின் படமும் பொறிக்கப்பட்டிருந்தது.

இதேவேளைமாநாடு இடம் பெற்ற கோவையில் புலிகளின் தலைவர் பிரபாகரனின் படம் பொறித்தகலண்டர்களும் விற்பனை செய்யப்பட்டது. (இ)

## நோர்வேத் . . .

கடனம் வெளியிடப் பட்டதுடன் புலிகள் மீது எத்தகைய தாக்குதல்களையும் தொடுக்க வேண்டாமென படைகளுக்கு சடுமையான உத்தரவுபிறப்பித்திருந்தது.

அரசினதும்- விடுதலைப்புலிகளதும் சமாதானப் பேச்சிற்கானபுரிந்துணர்வு உடன்படிக்கையின் உறுதியான நிலையில் உள்ள நோர்வே தனது இறுதிக்கட்ட முயற்சியாக புலிகளுடனானஇரண்டாவது சந்திப்பு இருசாராரதும் யுத்த நிறுத்த நீடிப்புக்கு வழிவகுக்கும் எனவும், புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிலைக்கு இருசாராரும் வரக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இது இவ்வாறு இருக்க நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கின் வன்னிக்கான இன்றைய விஜயத்தை விடுதலைப் புலிகள் உறுதி செய்யாவிடினும் அதை அவர்கள் மறுக்கவில்லை.

நோர்வேதூதுவர் ஜோன் வெஸ் பேர்க்கின் வன்னிக்கான விஜயத்தின் போது அரசுக்கும் புலிகளுக்குமிடையே காணப்படும் சில முரண்பாடானஅம்சங்களில் ஓர்இணக்கபாட்டிற்கு வரக்கூடியவகையில் பேச்சுக்கள் நடைபெறலாம் என நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளதுடன் இச்சந்திப்பின்போது விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனையும் சந்திக்ககூடும் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [வ]

## தமிழில் . . .

இச் சித்திரைப் புத்தாண்டில் கலந்து யாழ். மக்களுக்கு உரையாற்றுவதை தான் சிறப்பிற்குரிய ஒன்றாக கருதுவதாகவும் இனி வரும் காலங்களில் நாட்டில் யுத்தம்ஓய்ந்துசாந்தியும் சமாதானமும் ஏற்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். [க-1]

## இடம்பெயர்ந்த

மககள் பிரதிநிதிகள் இடம் பெயர்ந்த முஸ்லீம்களின் கஷ்ட நிலைமை தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்திற்குத் தெரியப் படுத்தவுள்ளனர்.

இனயுத்தம் நடவடிக்கை காரணமாக வடபகுதியில் இருந்து இடம் பெயர்ந்த ஒரு லட்சத்துக்கும் அதிகமான முஸ்லீம்களே தம்மை சொந்த இடத்தில் குடியிருக்க அனுமதிக்குமாறு விடுதலைப் புலிகடம் கோரிக்கை விடுக்கவுள்ளனர். [ம]


மங்கையர்மனம்மயங்கும் மங்காத அசல் 22கரட் தங்க நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம் அதுதான்

**மகாநதி ஜுவல்லறி**

72A, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

(இ/1769)


## சைக்கிள் ஓட்ட போட்டியும் பரிசளிப்பும்

[யாழ்ப்பாணம்]

சித்திரைப் புத்தாண்டினை ஒட்டி யாழ். செயலகமும் 51 வது படையணியும்இணைந்து நடத்திய சைக்கிள் ஓட்டப் போட்டி நேற்றைய தினம் இடம் பெற்றது.

வெற்றி பெற்ற வீர வீராங்கனைகளுக்கு துவிச்சக்கர வண்டிகள் மற்றும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

யாழ். மாவட்ட அரச அதிபர், மேலதிகஅரச அதிபர்மற்றும் யாழ். மாவட்ட கட்டளைத்துறை அதிகாரி காமினி ஜெயசுந்தர ஆகியோர்கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினர். (உ-10)

## உதவிப்பணம்

(மானிப்பாய்)

வலி தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம பெறுபவர்களினதும் மற்றும் காசநோய் தொழுநோய், புற்று நோய் என்பவற்றிற்கான உதவிப் பணம்பெறுபவர்களினதும் சித்திரைமாதத்திற்குரிய கொடுப்பனவுகள் அந்தந்த தபாலகங்களுக்கு சண்டிலிப்பாய் பிரதேசசெயலகத்தினால்அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று இவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (உ-120)

## மின்சாரம் இல்லை

[மல்லாகம்]

புன்னாலைக் கட்டுவன் வடக்குப் பகுதியின் பெரும் பாலான இடங்களுக்கு இதுவரையில் மின்சாரம் வழங்கப்படவில்லையென அப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பாடசாலை மாணவர் உட்பட பெருமளவில் இதனால் பாதிப்புறுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [க-122]


**THIGAL**

இணுவில்

**A/L 2003**

இணைந்த கணிதம்

G. ஐங்கரன் B.Sc

செவ். வியாழன்

3-00 மணி

(கி-1795)



## உடன் தேவை

நல்ல நிலையிலுள்ள தமிழ் தட்டச்சு இயந்திரம் தேவை, மதிக்கப்பட்ட விலையுடன் நேரில் அல்லது தபால் மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.

விளம்பர இல; 002

வலம்புரி

இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல; 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு ஏப்ரல் மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது